# தந்தை பெரியாரின் தனித்தன்மை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி!

மானுட சமுதாயத்தின் விடுதலைக்கான கருத்துகளுக்காக பழமைவாதிகளிடமும், பிற்போக்குவாதிகளிடமும் கடுமையான எதிர்ப்பை அவர் சந்தித்தார். ஊருக்குள் வரக்கூடிய தடை; பேசத் தடை; கோயிலுக்குள் நுழைய தடை; எழுதத் தடை; பத்திரிகை நடத்தத் தடை; போராட்டம் நடத்தத் தடை. அத்தனை தடைகளையும் உடைத்து, அவர் நம்மை வீதிகளில் மட்டும் நுழைய விடவில்லை. இந்த மண்ணுலகில் வாழக்கூடிய அத்தனை பேரின் மனங்களிலும் அவர் நுழைந்தி ருக்கிறார் அதுதான் தந்தை பெரியார் அவர்கள்! அதனால்தான், தந்தை பெரியார் அவர்கள் மறைந்து 50 ஆண்டுகள் ஆன பிறகும், இன்றைக்கு அவரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம், அவரைப் பற்றி புகழ்ந்து கொண்டிருக்கிறோம், அவருடைய வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவரை இன்றைக்கு நினைவுபடுத்தி அந்த உணர்வுகளை நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதுதான் தந்தை பெரியாரின் தனித்தன்மை!

தந்தை பெரியாரின் கருத்துகளை இன்றைக்கு வரைக்கும் எல்லா மக்களிடம் கொண்டு சேர்த்து, என்றென்றும் பெரியார் வாழ்கிறார் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார் நம்முடைய பெருமதிப்பிற்குரிய அய்யா ஆசிரியர் அவர்கள்! பெரியார் தொடங்கிய இயக்கத்தை பெரியாரின் கொள்கைகளை இந்த திராவிடப் பேரியக்கத்தை காத்து வருபவர்தான் நம்முடைய ஆசிரியர் அய்யா அவர்கள். இந்த 90 வயதிலும், அய்யா ஆசிரியர் அவர்கள் சுற்றி சுற்றி வரக்கூடிய இந்தப் பயணத்தை எல்லாம் பார்க்கின்ற போது, நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் ஆச்சரியப்படும் அளவிற்கு சொன்னாலும், அதை தந்தை பெரியாரிடம் அவர் கற்றிருக்கக்கூடிய அந்த பாடத்தைத் தான் இன்றைக்கு அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இன்னும் பல்லாண்டு காலம் நீங்கள் வாழ்ந்து, எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இன்னும் நீங்கள் ஊக்கத்தைத் தந்திடவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக, அய்யா பெரியாரின் தொண்டராக நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். பெரியாரின் தொண்டராக நான் வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன்.

“பெரியாரின் மண்டைச் சுரப்பை உலகு தொழும்” என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். இன்றைக்கு தந்தை பெரியாரை உலகமயமாக்கி உலகத்தின் பொதுச் சொத்தாக கொண்டு சேர்த்திருக்கிறோம்.

இந்த நூலகத்தை சிறப்புற உருவாக்கித் தந்திருக்கக்கூடிய ஆசிரியர் அவர்களுக்கும், தம்பி அன்புராஜ் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முத்தமிழறிஞர் துவக்கிய பெரியார் பகுத்தறிவு நூலகம்!**

நினைத்துப் பார்க்கிறேன்... அய்யா வருகிறபோது சொன்னார்.. 1974ஆம் ஆண்டு நம்முடைய முத்தமிழறிஞர் முதலமைச்சராக இருந்தபோது, இதே திடலிற்கு வந்து, பெரியார் பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை அன்றைக்கு திறந்து வைத்திருக்கிறார். அதற்குப் பெரியார் திடலில் உருவாக்கப்பட்டிருந்த இந்த டிஜிட்டல் நூலகம் எல்லா வகைகளிலும், பயன்படக்கூடிய வகையில் இன்றைக்கு அவருடைய மகனாக இருக்கக்கூடிய ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக வந்து இன்றைக்கு இந்த ஆய்வு மையத்தை நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

எப்போதும் பயனுள்ள பணிகளை பார்த்து, பார்த்து செய்யக்கூடியவர் நம்முடைய ஆசிரியர் அவர்கள். எனவே, திராவிடக் கழகத் தோழர்களையும், இதற்கு உறுதுணையாக இருக்கின்ற உங்கள் அத்தனை பேர்களையும் இந்த நேரத்தில் நான் மனதார வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கு எனது இனமான வணக்கத்தை இந்த நேரத்தில் செலுத்துகிறேன்.

அய்யா குறிப்பிட்டுச் சொன்னார், அண்மையில், கேரளா மாநிலத்தில் இருக்கக்கூடிய வைக்கம் போராட்டத்தை நினைவுபடுத்தி, வைக்கம் வீரராக வலம் வந்த தந்தை பெரியாருக்கு அங்கு புதிய மாளிகையும், கம்பீரமான சிலையையும், இளைய சமுதாயத்தினருக்கு பயன்படக்கூடிய வகையில் ஒரு பெரிய நூலகமும், திறந்து வைக்கப்பட்டு வைக்கம் விழாவினை சிறப்பாக நடத்தினோம்.

அப்போது நான் உணர்ந்தது என்னவென்று கேட்டால், அய்யா ஆசிரியர் அவர்கள் அப்படியே மெய்மறந்து அந்த நிகழ்ச்சிக்கு வந்தார். வந்தது மட்டுமல்ல, என்னை மனதார பாராட்டினார். வாழ்த்தினார். இன்னும் என்னை பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டும் அதற்காக நான் காத்திருக்கிறேன். காத்திருக்கிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் சொல்லி, அய்யா புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! என்று தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத்தை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

திருச்சி வடக்கு, தெற்கு, மத்திய - அரியலூர் - பெரம்பலூர் -

## புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட - திருச்சி கிழக்கு, மேற்கு, மாநகர ஆதி திராவிடர் நலக் குழு நிர்வாகிகள் கூட்டம்!

### மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிக்கை!

*சென்னை, டிச.25-*

ஆதி திராவிடர் நலக்குழு மாநிலச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாவட்ட மற்றும் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் வருகிற 29-12-2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணி அளவில் பெரம்பலூர், கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில், எனது தலைமையில் - போக்குவரத்துத் துறை அமைச்சரும் - அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளருமான சா.சி.சிவசங்கர் மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி.இராஜன், முன்னாள் எம்.எல்.ஏ., செ.புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., திப்பம்பட்டி ஆறுச்சாமி - ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர்கள் மு. பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தன், அரூர் சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னிலையில் -

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் - தி.மு.க. முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ், எம்.பி., பள்ளி கல்வித் துறை அமைச்சரும் - திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டத் துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ். ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும் - ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவருமான மா.மதிவேந்தன் மற்றும் பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, எம்.எல்.ஏ., திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன், எம்.எல்.ஏ., புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறப்பினர்கள் பெரம்பலூர் எம்.பிரபாகரன், இலால்குடி சௌந்தரபாண்டியன், மண்ணச்சநல்லூர் எஸ்.கதிரவன், ஜெயங்கொண்ம் கா.சொ.கண்ணன், எம்.பழனியாண்டி, துறையூர் எஸ். ஸ்டாலின்குமார் மற்றும் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர் பா.துரைசாமி வரவேற்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாவட்ட மற்றும் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு ஆகிய மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்திற்கு வரும்போது தங்கள் அமைப்பின் நடவடிக்கை குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டு வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

## நாகர்கோவில் மாநகர தி.மு.க. சார்பில் 52 வார்டுகளில் நலஉதவிகள்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் 300 பேருக்கு நலஉதவிகள் வழங்கினார்!

*குமரி, டிச. 25 -*

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தி.மு.க. சார்பில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் தலைமையில், அவரது ஏற்பாட்டில் நாகர்கோவில் மாநகர 52 வார்டுகளில் உள்ள ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியானது 23.12.2024, திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் உள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஏழை, எளியோர் 300 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்வில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். சதாசிவன், நாகர்கோவில் மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், துணை செயலாளர்கள் பி.வேல்முருகன், ம.மேரி பிரின்ஸி லதா, மண்டலத் தலைவர் கு. அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர் த.தங்கராஜா, பகுதி செயலாளர்கள் என்.பி.துரை, த.ஜீவா, மு.சேக்மீரான், இராஜாக்கமங்கலம் துணை பெருந்தலைவர் செ.சரவணன் உட்பட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

“ஒரே நாடு ஒரே தேர்தல்” மசோதா - தேர்தல் விதிகளில் திருத்தம் என்பன போன்றவை

## ஒட்டுமொத்த இந்தியாவையும் சூடாக்கியிருக்கிறதென்றால் அது மிகையல்ல!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, டிச. 25-*

“ஒரே நாடு ஒரே தேர்தல்” மசோதா - தேர்தல் விதிகளில் திருத்தம் என்பன போன்றவை ஒட்டுமொத்த இந்தியாவையும் சூடாக்கியிருக்கிறதென்றால் அது மிகையல்ல என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம் செய்துள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய அரசு கடந்த 20ம் தேதி, தேர்தல் விதிகளில் ஒரு முக்கிய திருத்தத்தை மேற்கொண்டது. அதாவது, பொதுமக்கள் தேர்தல் தொடர்பாக எழும் சில சந்தேகங்களை, தேர்தல் ஆணையம், நீதிமன்றம் அல்லது ஆர்.டி.ஐ. மூலமாக இதுவரை கேட்டுப் பெறலாம். அவ்வாறு கேட்கப்படும் ஆவணங்களும் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கு செக் வைக்கும் வகையில், ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகள் 1961 - விதி 93ல் சில திருத்தங்களை மேற்கொண்டது.


தினகரன்

டிசம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை

தேர்தல் விதி 'மீறல்'

ஒன்றிய அரசு கடந்த 20ம் தேதி, தேர்தல் விதிகளில் ஒரு முக்கிய திருத்தத்தை மேற்கொண்டது. அதாவது, பொதுமக்கள் தேர்தல் தொடர்பாக எழும் சில சந்தேகங்களை, தேர்தல் ஆணையம், நீதிமன்றம் அல்லது ஆர்டிஐ மூலமாக இதுவரை கேட்டுப் பெறலாம். அவ்வாறு கேட்கப்படும் ஆவணங்களும் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கு செக் வைக்கும் வகையில், ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகள் 1961 - விதி 93ல் சில திருத்தங்களை மேற்கொண்டது.

முன்னதாக தேர்தல் நடத்தை விதி 93 (2) (ஏ)ன் படி, தேர்தல் தொடர்பான மின்னணு ஆவணங்கள் உள்பட அனைத்து ஆவணங்களும் பொது ஆய்வுக்கு கிடைக்கும் என இருந்தது. திருத்திய விதிகளின்படி, அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் பெற முடியாது. வேட்புமனுக்கள், நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள், தேர்தல் முடிவுகள், செலவு கணக்குகள் போன்றவற்றை மட்டுமே பெற முடியும். சிசிடிவி உள்ளிட்ட மின்னணு ஆவணங்களை யாரும் கேட்டுப் பெற முடியாது.

முன்னதாக தேர்தல் நடத்தை விதி 93 (2) (ஏ)ன் படி, தேர்தல் தொடர்பான மின்னணு ஆவணங்கள் உள்பட அனைத்து ஆவணங்களும் பொது ஆய்வுக்கு கிடைக்கும் என இருந்தது. திருத்திய விதிகளின்படி, அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் பெற முடியாது. வேட்புமனுக்கள், நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள், தேர்தல் முடிவுகள், செலவு கணக்குகள் போன்றவற்றை மட்டுமே பெற முடியும். சி.சி.டி.வி. உள்ளிட்ட மின்னணு ஆவணங்களை யாரும் கேட்டுப் பெற முடியாது.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவின்போது, மாலை 5 மணிக்கு பதிவாகி இருந்த வாக்கு எண்ணிக்கையை விட, இரவு 75 லட்சம் வாக்குகள் கூடுதலாக அறிவிக்கப்பட்டன. பொதுவாக, தேர்தல் வாக்குப்பதிவு முடிந்தும் வாக்காளர்கள் வரிசையில் நின்றால், அனுமதி சீட்டு முறையில்தான் வாக்களிக்க முடியும். இதன்படி சுமார் 100 பேர் மட்டுமே வாக்களிக்க முடியும். ஆனால், அதிரடியாக 75 லட்சம் வாக்குகள் அதிகமானது பெருங்குழப்பத்தையும், தேர்தல் நியாயமான முறையில் நடந்துள்ளதா என்ற சந்தேகத்தையும் கிளப்பியதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

இதுதொடர்பாக வழக்கு தொடரப்பட்ட நிலையில், அரியானா சட்டமன்ற தேர்தலில் பா.ஜ. வென்ற வாக்குச்சாவடியில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகள், வாக்குப்பதிவு ஆவணங்களை கோரி, பிரபல வழக்கறிஞர் மெகமூத் பிரச்சா என்பவர், பஞ்சாப் - அரியானா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். நீதிமன்றம் மேற்கண்ட ஆவணங்களின் நகல்களை வழங்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது. தொடர்ச்சியாக மாநில சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் முறைகேடு நிகழ்ந்ததாக கூறி உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

இதன்காரணமாகவே, விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. ஆனால், நீதிமன்ற வழக்கு ஒன்றின் அடிப்படையிலேயே இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளன. ஆனால், என்ன வழக்கு, ஏனிந்த மாற்றம் என உரிய முறையில் விளக்கவில்லை. மின்னணு ஆவணங்களை பொதுமக்கள் பெறுவதை தடுக்கும் வகையிலேயே, தேர்தல் விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இது இந்திய தேர்தல் ஆணையத்தின் ஒருமைப்பாட்டை அழிக்கும் பா.ஜ. அரசின் திட்டமிட்ட சதி என் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார். நாட்டில் சுதந்திரமான - நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதன் மீது தொடுக்கப்பட்டுள்ள மக்களாட்சிக்கு விரோதமான தாக்குதல் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தேர்தல் விதி திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பல்வேறு எதிர்க்கட்சிகளும் இந்த திருத்தத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தாக்கல், தேர்தல் விதிகளில் திருத்தம் என நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் நடந்த நிகழ்வுகள், ஒட்டுமொத்த இந்தியாவையும் சூடாக்கி இருக்கிறது என்பது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 51வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு 51வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் யோக கிருஷ்ணகுமார் தலைமையில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.